[28th February 1969

திரு. எம். எத்திராஜுலு : காலஞ்சென்ற முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்றவுடன் பத்திரிகையாளர்களை வரவழைத்து 'நானும் ஒரு பத்திரிகையாளன் தான்', என்றும் 'பத்திரிகையாளர்களுக்கு ஒரு சங்கம் தேவை' என்றும் . . .

மிஸ்டர் சேர்மன் : இது வேறு கேள்வி. கனம் உறுப்பினருடைய கேள்வி பின்னால் வரப்போகிறது.

Secondary Grade Teachers

*71 Q.—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether a Secondary Grade Teacher, emigrating from one Aided High School to another in the State without break of service, is eligible to draw the last salary drawn as per his service register;

(b) the number of cases in Aided High Schools in Madras City where fixation of salary has been done as above in respect of the period 1966–67 and 1967–68;

(c) the number of such cases in City High Schools where payment or part payment as per such fixation is yet to be made for the same period; and

(d) the reasons therefor ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) 1966-67-ல்—27.

1967-68-ல்—28.

(உ) எதுமில்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Allotment of site for Madras Reporters' Guild

*72 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Madras Press Reporters' Guild had asked for allotment of a site in the Government Estate, Mount Road, for its building; and

(b) the reply given by the Government regarding this ?

பத்திரிகை நிருபர்கள் சங்கத்திற்கு மனை ஒப்படை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை பத்திரிகை நிருபர்கள் சங்கத்திற்கு மவுண்ட் ரோடு சர்க்கார் எஸ்டேட்டில் கட்டிடம் கட்ட இடம் கேட்டனரா?

(இ) இது பற்றி சர்க்கார், என்ன பதில் கூறியது?

28th February 969]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) & (இ) ஆம். சென்னை, மலைச்சாலையில் (Mount Road) உள்ள அரசாங்க மாளிகையில் மனை ஒப்படை செய்ய அல்லது குத்தகைக்கு விடுமாறு வேண்டி சென்னைப் பத்திரிகை நிருபர்கள் சங்கத்திடமிருந்து 13—8—1968 தேதியிட்ட முறையீடு ஒன்று கிடைத்துள்ளது. இது (கட்டிடத்) தலைமைப் பொறியாளருக்கும் வருவாய்த்துறை வாரியத்துக்கும் கருத்துரை வேண்டி அனுப்பப்பட்டுள்ளது.

மிஸ்டர் சேர்மன் : கனம் உறுப்பினர் திரு. எம். எத்திராஜுலு முதலில் கேட்ட கேள்வியை இப்போது கேட்கலாம்.

திரு. எம். எத்திராஜுலு : காலம் சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களை அழைத்து 'நானும் ஒரு பத்திரிகையாளன்தான், உங்களுக்கு சங்கம் அவசியம்தான்' என்று கூறியிருக்கிறார்கள். அவர் சொல்லியதன் பேரில் இப்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு அண்ணா அவர்கள் மனை ஒதுக்குவதற்குத் தேர்தெடுக்கப்பட வேண்டுமென்றும் வேறு யாருக்கும் அது கொடுக்கப் படாமல் இருந்தால் அதை சங்கத்திற்குக் கொடுக்கலாம் என்றும் ஆலோசனை கூறியதற்கு பிறகுதான் இது பரிசீலிக்கப்படுகிறது.

Palar, Porandalar and Kudiraiyaru Schemes

* 73. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the present stage of the scheme for the construction of the Palani-Palar-Porandalar reservoir and the Kudiraiyaru Scheme, Madurai district; and

(*b*) whether the work will commence in the current financial year ?

பாலாறு, பொருந்தலாறு, குதிரையாறு திட்டங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட பழனி, பாலாறு, பொருந்தலாறு அணைகட்டு திட்டமும், குதிரையாறு திட்டமும் எந்நிலையிலுள்ளன ?

(இ) நடப்பு நிதியாண்டில் வேலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) இத்திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

(இ) இத்திட்டங்கள் இறுதி செய்யப்பட்டு, அவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்ட பிறகே, அவற்றை நிறைவேற்ற எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்படும்.